பதிவு எண். எம். 8123. தமிழியக்க நாளிதழ் விலை காசு 6.

# குறள் நெறி

தமிழ் வாழ்க

ஆசிரியர்: சி. இலக்குவனார் எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி

மலர் 1 | மதுரை ஐப்பசி கசு (1-11-66) வெளியூர் ஐப்பசி கஉ (2-11-66) | இதழ் 136

கி. மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழக நிலையை அறிவதற்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆசிரியர் இலக்குவனரால் எழுதப்பட்டுள்ள தொல்காப்பிய ஆராய்ச்சியைப் படியுங்கள்.

தமிழ் விலை உரு. 4-00
ஆங்கிலம் ,, ,, 25-00

கிடைக்குமிடம் :
"குறள் நெறி"
வெளியீட்டகம்
மதுரை 5.

# கல்லூரியிலும் கல்விக்குக் கட்டணமில்லை!

## காங்கிரசுக் கட்சித்தலைவர் காமராசர் அறிவிப்பு

### வாக்குகளைப் பெற விரிக்கும் வலையோ?



இப்பொழுது தமிழ்நாட்டுக் கல்விக் கூடங்களில் பள்ளியிறுதி வகுப்புவரைக் கட்டணம் கிடையாது. கல்லூரியிலும் கட்டணமில்லாமல் கல்விபெறும் முறை கொண்டு வரப்படுமென்று ஆங்காங்கு பொதுக் கூட்டங்களில் கூறிக்கொண்டிருந்தார் இப்போது அது உண்மையாகிவிட்டது. அடுத்த ஆண்டு முதல் கல்லூரியில் புகுமுகவகுப்புக் கட்டணம் கிடையாது என்று அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவர் காமராசர் அறிவித்துள்ளார்.

*செய்யாறு அக் 31—*

வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள செய்யாறு என்னும் ஊரில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் தலைவர் காமராசர் அவர்கள் அறிவித்துள்ளார். தற்பொழுது பள்ளியிறுதி வகுப்புவரை கட்டணமின்றிக் கல்விகொடுக்கிறோம் தொடக்கத்தில் நாம் இதைக் கூறியபொழுது இது இயலுமா? கூடுமா? என்றனர் சிலர். நாம் செய்து காட்டவில்லையா! மற்றவர் சொன்னதற்காக விட்டுவிட்டோமா என்ன?

இனிக் கல்லூரியிலும் கட்டணம் இல்லாமல் கல்விபெற வசதியளிக்க நினைக்கின்றோம் இதனால் 3 கோடி உருபாய் நட்டமாகும். எதைஎதையோ சமாளித்து ஈடுகட்டும் நாம் இந்தமூன்றுகோடி ருபாயைச் சமாளிக்க முடியாதா என்ன?

#### புகுமுகவகுப்புக்குக் கட்டணம் இல்லை

வருகிற ஆண்டுத் தொடக்கம் முதல் கல்லூரிகளில் புகுமுக வகுப்புப் படிக்கும் மாணவர்கள் கட்டணம் கட்ட வேண்டியது இல்லை.

### எழுச்சிகொள் இளந்தமிழா!

"காலஞ்சென்ற புதுமைப் பித்தன் ஒரு தடவை இந்திப் புத்தகம் ஒன்றைத் தலைகீழாக வைத்துப் படித்துக் கொண்டிருந்தாராம்." "ஏன் தலைகீழாக வைத்துப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள்" என அவரது நண்பர் ஒருவர் வினவிய பொழுது "நான் என்ன செய்வது? நேராக வைத்துப் படித்தால் ஒவ்வொரு எழுத்தும் தூக்குப்போட்டு கொண்டு தொங்குவது போல் தோற்றமளிக்கிறதே!" என்றாராம்.

அத்தகைய தேவ நாகரிக வடிவத்தில் தான் நமது அன்னைத் தமிழை எழுத வேண்டும் என்று நடுவண் அரசினர் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

இதைவிடக் கேடான செயல் தமிழனுக்கு வேறென்ன வேண்டும்?"

—மாணவர் தேர்தல் படைத் தொடக்க விழாவில் காமராசு.

### கழகத்தை அழிக்கக் காமராசரால் இயலாது.

#### அறிஞர் அண்ணாவின் முழக்கம்

"பணத்தாலும், ஆட்சிச் செல்வாக்கினாலும் காமராசர் கழகத்தை வீழ்த்த எண்ணுவரேயாயின அது வெறும் பகற்கனவாய்த்தான முடியும். எத்தனையோ தமிழ் மறவர்கள் கண்ணீரும் செந்நீரும் சிந்தி காத்த கழகத்தை அழிக்கக் காமராசரால் இயலாது" என அறிஞர் அண்ணா அவர்கள் திருவண்ணாமலையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.



*திருவண்ணாமலை அக். 31*

திருவண்ணாமலையில் நடைபெற்ற கழகத் தேர்தல் நிதியளிப்பு விழாவில் கலந்து கொண்டு அறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றியதாவது.

நீங்கள் நகர தி. மு. க. சார்பில் உரு. 3000 தேர்தல் நிதி கொடுத்தபோது—காங்கிரசுக்காரர் எவரேனும் இங்கிருந்தால் வெறும் மூன்றுதான் என்று கண் சிமிட்டிக் கேலி செய்வார்.

காங்கிரசுக்கு நூறுயிரக் கணக்கில் நிதியளிப்பவர் தங்கள் வணிகத்தில் பெறும் ஒரு நாள் ஊதியத் தொகையை அளிக்கிறார்கள். என்னிடம் தருகிற பணம் ஒரு நாளெல்லாம் ஓயாது உழைத்துக் கூலியாகப் பெறுகிற ஒரு உருபா இரண்டு உருபா தான்.

"நாடு முன்னேறிவிட்டது இந்தியாவில் இவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டதைப் போல் வேறு எந்த நாட்டிலாவது உள்ளதா" என்றெல்லாம் பெருந்தாத கூற்றுக் கூறி வரும் காமராசருக்குப் பொருளியல் வல்லுநர்களின் கணக்குப் புரியவில்லை போலும்!

காங்கிரசின் 19 ஆண்டுக் கால ஆட்சிக்குப் பிறகு—அவர்கள் கொடுத்த அறிக்கையின் படி—430 நூறுயிரம்மக்கள் ஒரு நாளைக்கு ஒருவர் 430 காசு வருமானம் பெறுகிறார். இந்தப் புள்ளிவிவரம்நயன்காவது ஐந்தாண்டுத் திட்டங்களில் உள்ளது.

மேலும் 460 நூறுயிரம் பேருக்கு 51 காசு வருமானம் $4\frac{1}{2}$ கோடிப் பேருக்கு 59 காசு வருமானம்17கோடிப்பேருக்கு ஒரு உருபாய்க்கும்குறைவான வருமானம் எனப்புள்ளி விவரம் கூறுகின்றது. இப்போது நீங்கள் கூறுங்கள். நாடு முன்னேறி விட்டதா? இல்லையா? என்று.

### காங்கிரசாரின் உண்ணா நோன்பு!

*திருப்பரங்குன்றம் அக் 31—*

திருப்பரங்குன்றத்தில்நடைபெற்ற லால் பகதூர் நினைவுப் படிப்பகத் திறப்பு விழாவில் பேசிய, மதுரை மருத்துவர் சங்கத்தின் தலைவரும் காங்கிரசுக்காரருமான திரு. சுருளி என்பவர் காங்கிரசுக்காரர்களுக்குப் பதவிஆசை பிடித்து விட்டது என்றும் கட்சிக் குழப்பங்களை அடக்க வேண்டும் என்றும் அப்பொழுது தான் 67-இல் வெற்றிபெற முடியும்என்றும் பக்தவத்சலம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம்உருக்காலை அமைக்க பாடுபடாவிட்டால் அவரை எதிர்த்துத் தாம் உண்ணா நோன்பு மேற்கொள்வதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

# தமிழின் வாழ்வே தமிழர் வாழ்வு

குறள் நெறி
தமிழ் வாழ்க
தி. வ. ஆண்டு 1997 ஐப்பசி 16 செவ்வாய் (11—1—66)
உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். 592

# செலவு (பயணம்) தொடர்கின்றது.

செய்தி இதழ்கள் மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்குகின்றது. காலைச்சிற்றுண்டி அருந்தும் முன் கையில் எடுப்பது செய்தி இதழ்தான். தமிழில் வெளிவரும் அச்செய்தி இதழ்கள் அனைத்தும் செந்தமிழைச் சிதைத்த வண்ணமே வெளிவருகின்றன.

"சர்க்கார் ரகசியம் என்று கருதும் எந்தத் தஸ்தவேஜியிலிருந்தும் மேற்கோள் கூற அசெம்பிளி அல்லது பார்லிமெண்ட் மெம்பர் எவருக்கும் உரிமை இல்லையென்றும் ஆனால் முன் கூட்டி நோட்டீஸ் தராமல் சபாநாயகருக்குத் தெரியாமல் திடீரென கூறக்கூடாதென்றும், தேச நலனுக்கானதில்லை அல்லது நாட்டின் தற்காப்புக்கு உகந்ததில்லை என்று சபாநாயகர் கருதினால் அந்த மெம்பர் அந்த தஸ்தா வேஜிலிருந்து மேற்கோள் காட்டாது. சபாநாயகர் தடுக்கலாம் என்றும் கூறினார்" இவ்வாறு ஒரு நாளிதழில் வெளிவந்துள்ளது. இதனையே நற்றமிழில்

"அரசு மறைபொருள் என்று கருதும் எந்த ஆவணத்திலிருந்தும் மேற்கோள் கூற சட்ட மன்ற அல்லது பாராளுமன்ற உறுப்பினர் எவர்க்கும் உரிமை உண்டென்றும் ஆனால் முன் கூட்டி அறிவிப்புத் தராமல் அவைத்தலைவருக்குத் தெரியாமல் திடும் எனக்கூறக்கூடாது என்றும் தேச நலனுக்கு அல்லது தற்காப்புக்கு ஏற்றதில்லை என்று அவைத்தலைவர் கருதினால் அந்த உறுப்பினர் அந்த ஆவணத்திலிருந்து மேற்கோள் காட்டுதலை அவைத்தலைவர் தடுக்கலாம் என்றும் கூறினார்"

என்று கூறலாமன்றோ? இதில் பொருள் விளங்காத சொல் என்றுமே இல்லை. 'ஆவணம்' என்பதைப் பொருள் விளங்காதசொல் என்று சிலர் கூறலாம். இச்சொல் சில ஊர்ப்பகுதிகளில் வழக்கில்உள்ளது. பண்டைய கல்வெட்டுக்களிலும் நூல்களிலும் பெருவழக்காகப் பயின்றுள்ளது. 'ரிகார்டு' 'தஸ்தவேஜு' போன்ற அயல் மொழிச் சொற்கள் இதனை வழக்கினின்றும் போக்கி விட்டன. 'உறுப்பினர்' என்ற தமிழ்ச் சொல் இருக்கும் போது 'மெம்பர்' என்பதனை ஏன் பயன்படுத்த வேண்டும். 'மெம்பர்' என்ற சொல் நாளடைவில் 'உறுப்பினர்' என்ற சொல்லைத் துரத்திவிடுமன்றோ? அறிவிப்பு அல்லது அறிக்கை என்பதனை விடுத்து 'நோட்டீஸ்' என்று கூறுவானேன்? இவ்வாறு அயல்மொழிச் சொற்களைச் செய்தி இதழ்களில் படிக்கும் தமிழர்கள் இவற்றையே தமிழ்ச் சொற்கள் என்று கருதிப்பயன் படுத்தி விடுகின்றனர். நற்றமிழில் உரையாடவேண்டும், எழுதவேண்டும் என்று கருதுபவர்கள்கூட நற்றமிழைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை உருவாகி விடுகின்றது. ஆகவேதான் நற்றமிழில் செய்திகளை வெளியிடும் செய்தி இதழ்கள் பெருக வேண்டும் என்று கருதுகின்றோம். இப்பணியில் நாமும் துணிந்து இறங்குகின்றோம். செய்தி நாளிதழ் வெளியிடுவது என்பது பெருஞ் செல்வம் படைத்தவர்களால்தான் இயலும் என்பதை நாமும் அறிவோம். ஆயினும் செல்வம் படைத்தவர்கட்குச் செந்தமிழ்ப்பற்று உண்டாவது கிடையாது. ஆகவே செந்தமிழே உயிர் எனக்கருதும் நாம் இத்தொண்டில் ஈடுபடவேண்டிய கட்டாய நிலை ஏற்படுகின்றது.

நமக்கோ இடையூறுகள் பற்பல. இவ்வரிய செந்தமிழ்ப்பணியை வாழ்த்திவரவேற்பார் மிகமிகக் குறைவாகவே உள்ளனர்.

தமிழ் நாட்டின் தனிப் பெருந் தமிழ்க் காவலர்களும் அரசியல் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்ட 'குறள்நெறி' நாளிதழ்த் தொடக்கநாள் நிகழ்ச்சியை மதுரையிலிருந்து வெளிவரும் செய்தித்தாள்கள் ஒன்று கூட வெளியிட்டிலது. அவ்விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய தலைவர் ஒருவரின் சொற்பொழிவுப் பகுதியை வெளியிட்ட ஒரு நாளிதழ் அச்சொற்பொழிவு நிகழ்ந்த இடத்தையோ விழாவையோ குறிப்பிட்டிலது. செய்தி இதழ்களின் செந்நெறி இவ்வாறுளது. அன்பர்களோ "இம்முயற்சி இடர்ப்பாடுடையது; ஆதலின் இதனைக் கைவிடுக" என்றுதான் அறிவுரை கூறுகின்றனர். நமக்கோ நாளும் நாளும் செந்தமிழ் சாகடிக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டு பாழும் வயிற்றை வளர்த்துக் கொண்டிருக்க இயலவில்லை. "மெல்லத்தமிழ் இனிச் சாகும்" எனும் பேதை மொழியை நாம் அணு அணுவாகச் செத்தேனும் பொய்யாக்க வேண்டும் என்று உறுதி பூண்டு விட்டோம்" "உள்ளம் உடைமை உடைமை" எனும் திருவள்ளுவரின் திருவாய் மொழிக் கேற்ப உள்ள நாம் செந்தமிழ் காக்கும் பணியில் இச்செய்தியிதழை ஆளாக்க முற்பட்டுவிட்டோம்.

நாட்டு மக்களின் நல்லெண்ணம் நம்பால் உள்ளது எனும் துணிவுடையோம். தமிழ்க்காப்பு என்பது கட்சிகளுக்கு அப்பாற்பட்டது. அனைத்துக் கட்சிகட்கும் உரியது. ஆயினும் இன்று ஆளுங்கட்சியாம் காங்கிரசு இந்திமொழித் திணிப்புக்கு உடந்தையாய் இருப்பதனால் தமிழ்க்காப்புக்கு உரிமை கொண்டாட இயலாது. இந்தி முதன்மை செந்தமிழை அழிக்கும் என்பது உறுதி. இந்தி முதன்மை நாளும் நாளும் சுமத்தப்பட்டு வருகின்றது. இதனை அகற்றலே தமிழ்க் காப்பின் முதற்பணியாகும். உண்மைத் தமிழ்ப்பற்றுடைய காங்கிரசுக் கட்சியினர் உள்ளத்தால் நம்பக்கமே இருப்பர்.

இன்றைய எதிர்க்கட்சியாகவும் நாளைய ஆளுங்கட்சியாகவும் இருக்கின்ற தி. மு. கவும் ஏனைய கட்சிகளும் நம் தமிழ்க்காப்புத் தொண்டுக்கு நல்லுதவி நல்கும் என்பதில் ஐயமின்று. செந்தமிழில் செய்திகளைத் தரும் இந்நாளிதழை வாங்கிப் படித்தாலே நற்றமிழுக்கு நாளும் ஆற்றும் பணியாகும்.

தாள் பங்கீட்டு உரிமை கிடைக்கப் பெறுததினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நாளிதழ் மீண்டும் வெளிவருகின்றது. தாளைப் பயன்படுத்தலாம் எனும் உரிமை ஆணை பெற்றோமே யன்றி இன்னும் தாள் (விலைக்குத் தான்) கிடைத்திலது. தாள் கிடைக்கும் வரையில் இப்பொழுதைய சிறிய அளவில்தான் வெளியிட இயலும். தாள்கிடைத்தவுடன் பெரிய அளவில் வெளியிடுவோம் எனக் கூறிக்கொள்கின்றோம்.

தமிழ்க்காப்புப் பணிச் செலவு' இடையீட்டுக்குப் பிறகு மீண்டும் தொடங்குகின்றது. அது தடையின்றிச் செல்வது அன்பர்களாம் உங்கள் பொறுப்பில்தான் உள்ளது.

என்கடன் பணிசெய்து கிடப்பதே
நும்கடன் அடியேமைத்தாங்குதலே.
வாழ்க தமிழ்; வெல்க நம்தொண்டு.

## போர் மறவருக்குச் சத்துணவு

புதுதில்லி அக் 3. மலைப்பகுதிகளில் பணியாற்றும் போர் மறவருக்குப் பயனுறும் சத்துணவொன்று உருவாக்க சிறு தொழிற்சாலையொன்றைப் படை உணவுச் சோதனைப் பகுதி ஏற்படுத்தியுள்ளது. இந்த உணவு கடந்த ஆண்டில் இமயமலை உச்சியை எட்டிப் பிடித்து வெற்றிகண்ட வீரர்களுக்குப் பெரிதும் பயன் பட்டது. இம்முறையால் ஆறுமாத காலம் வரை கெடாதபடி உணவை வைத்திருக்க இயலும்.

## நகரும் பனிக் குன்றுகள்!

அலாஸ்கா அக் 1. அலாஸ்காவை ஒட்டிப் பசிபிக்கடற்பரப்பில்நகரும் பனிக் கட்டிக் குன்றுகள் மிதந்து கொண்டிருக்கின்றன. இவை வழக்கத்திற்கு 100 கல் விரைவில் ஊர்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றில் சில குன்றுகள் 300 அடி வரையில் உயரம் உடையவையாக உள்ளன. இவற்றைக் கண்டு யாரும் அஞ்ச வேண்டாமென அமெரிக்கப் பூவியல் வல்லுநர் இது தொடர்பாக விடுத்த அறிக்கையொன்றில் கூறியுள்ளனர்.

## தொடக்கப்பள்ளி ஆசிரியர் தூதுக்குழு

### புதுதில்லி செல்கிறது

(குறள்நெறிச்செய்தித்துறை)

பரமக்குடி. அக் 31— நடுவண் அரசினரிடம் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் குறைகளை எடுத்துச் சொல்லிப் பயன் பெறத் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சார்பாகத் தூதுக்குழு ஒன்று புதுதில்லி செல்லவிருக்கிறது.

தூதுக்குழுவில் ஆசிரியர் கூட்டணியின் மாநிலத் தலைவர் வி. இராமசாமி (நாமக்கல்) மாநிலப் பொதுச் செயலாளர் வி. இராமுண்ணி (சென்னை) சே. எசு. இராசு (மதுரை) பெ. கந்தசாமி (பாப்பிரெட்டிப்பட்டி) க. வெள்ளைச்சாமி (பரமக்குடி) ஆகியோர் உள்ளனர்.

இத் தூதுக்குழு நவம்பர்த் திங்கள் முதல் வாரத்தில் புதுதில்லி செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உருசியாவில் உருசியமொழி கட்டாய பாடமன்று!

மாசுகோ. அக் 31— சோவியத் குடியரசுகளிலுள்ள பள்ளி, கல்லூரிகளில் உருசிய மொழி கட்டாய மொழி அன்று, விருப்ப மொழியே. மிகுதியாக உருசிய மொழி பேசப்படும் இடங்களிலுள்ள கல்வி நிலையங்களில் மட்டுமே அது கட்டாய பாடமாகவுள்ளது. இருப்பினும் அந்நாட்டில் இது ஒரு பொதுமொழியாக இருப்பதால் இயல்பாகவே விரும்புவோர் கற்கும் தேசிய மொழியாகியுள்ளது.

இது அசர்பைசான் குடியரசுக் கல்வித்துறை உறுப்பினர் திரு. இரபிக் இரதசாபோல் தரும் தகவல். நம் நாட்டினர் நலம் நாடிக் கொடுத்தது போலும்.

## தொலைபேசி மூலம் கடிதம்.

இலண்டன் அக் 31— தொலைபேசி மூலம் கடிதங்களை அனுப்பும் வாய்ப்பை இன்னும் பத்தாண்டுகளில் ஏற்படுத்தலாமென ஆங்கில ஒலிபரப்புக் கழகப் பொறியமைப்பாளர் மக்ளின் அறிவித்துள்ளார். செய்தித்தாள்களையும் மின்னனு முறையில் அனுப்ப இயலுமெனவுஞ் சொன்னார்.

இப்பத்தாண்டின் இறுதியில் பெருநாடுகள் அனைத்திலும் வண்ணத் தொலைக்காட்சி நிலையங்களும் ஏற்படலாம் எனவும் அவர் கருதுகிறார்.

## அவைத் தலைவர்கள் மாநாடு

புதுதில்லி அக் 31— சட்டமன்றங்களிலும் மக்களவையிலும் ஏற்படும் குழப்பங்களைப் பற்றி ஒரு தீர்வு காணக் அவைத் தலைவர்கள் மாநாட்டுத் தலைவர் உகும்சிங் அவர்கள் அளித்த அறிவுரை வருமாறு:

விரைவாக மாறிவரும் அரசியல் சூழ்நிலையில் அரசு பெரும்பான்மை வலிமையை மட்டும் நம்பியிருப்பது கூடாது.

எதிர்க கட்சிகளைக் குறை கூறிக்கொண்டிருப்பதைவிடுத்துப் போர்க்களத்தில் எதிரியைச் சமாளிப்பதைப் போலத் தக்க திட்டம் வகுத்து செயல் படுத்த வேண்டும்.

குடியரசுமுறை செம்மையாகச் செயல்பட, கருத்து வேறுபாடு வேண்டப்படுவதே. அதைச் எடுத்துச் சொல்லும் முறையில் ஓரளவு அடக்க ஒடுக்கமும், மட்டு மதிப்பும் வேண்டும்.

அவையின் அலுவலுக்கு இடையூறு விளைவிக்கும் எந்த உறுப்பினரையும் தண்டிக்க வேண்டும். இதனை முடிவு செய்வது தலைவரே.

அரசு மறைபொருளெனக் கருதும் எந்த ஆவணக் குறிப்பையும் மேற்கோள் காட்ட உறுப்பினருக்கு உரிமையுண்டு. இருந்தாலும் முன்னறிவிப்பும் அவைத் தலைவர் இசைவும் வேண்டும். நாட்டின் தற்காப்பிற்கு ஊறு விளைவிப்பதானால் தலைவர் ஒப்புதல் அளிக்க மறுக்கலாம்.

எதிர்க்கட்சிகள் கூறும் நெறியான உத்திகளுக்குச் செவிசாய்த்துச் சிந்தித்து முடிவெடுப்பதே முறை.

அவைத் தலைவரின் அறிவுரை அரியதே. அரசும் ஏற்று ஆவண செய்வதே முறை.

# தாய்மொழிக் காப்பே எம் தலையாயகடமை!

## மாணவர் தேர்தல் படையின் தொடக்கவிழாவில் மாணவர் தலைவர் காமராசு முழக்கம்!



"பல்கேரியாவில் 19 மொழிகள் [illegible] ஆட்சிமொழியாக இருக்கையில் இந்தியத் துணைக் கண்டத்தில் பதினான்குமொழிகள் ஆட்சிமொழியாவதற்கு எவ்விதத் தடையும் இல்லை. எனவே இந்திக்கு மட்டும் முதன்மையளித்துப் பிறமொழிகளை நடுவணரசினர் புறக்கணிப்பரேயானால் இந்திய ஒருமைப்பாடு சீர்குலைந்து விடும்" என்றும் அவர் கூறினார்:

மதுரை அக் 31— மதுரையில் மாணவர் தேர்தல் படை அமைப்புக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். கூட்டத்திற்குப் பா. செயப்பிரகாசம் தலைமைதாங்கினார். க.ப. இராமசாமி வரவேற்றுப் பேசினார். மறவர்கோ (செந்தமிழ்க் கல்லூரி) சதாசிவம் (அமெரிக்கன் கல்லூரி) கிருட்டிணசாமி (மதுரைக்கல்லூரி) திருச்சி மாணவர் தலைவர் அசீஃசுகான் காரைக்குடி மாணவர் தலைவர் சிவா, கலைமணி, சென்னை சட்டக்கல்லூரி மாணவர் இராசாமுகமது, ஆகியோரும் உரையாற்றினர்.

காமராசு தனது சிறப்புரையில் மேலும் கூறியதாவது:

"சாகித்திய அகெடமியின்" இந்திப் புத்தகம் ஒன்றில் சச்சிதானந்தவாத்சாயன எனும் இந்திப் பேராசிரியர் ஒருவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தனக்கென ஒரு குழப்பமான இலக்கணத்தை உருவாக்கிக் கொண்ட இந்திக்கு ஆட்சிமொழியாவதற்கு எவ்விதத் தகுதியும் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக நீடிக்கக்கூடாது என்பதற்குப் பிறர் கூறும் காரணங்களை ஏன் இந்தி ஆட்சி மொழியாகக்கூடாது என்பதற்கும் பொருந்தும்.

இப்போதிருக்கும் மாநில அரசு பதவியையே குறிக்கோளாகக் கொண்டு மொழியைப் புறக்கணிக்கிறது. வரும் 67-தேர்தலில் 'இந்தி வேண்டுமா? இந்தியா வேண்டுமா? என நடுவணரசைத் தட்டிக்கேட்கும் இந்தி எதிர்ப்பாளரையே ஆட்சியில் அமர்த்த வேண்டும். இவ்வகையில் மொழிக்கொள்கையைப் பொறுத்தவரையில் நமக்கும் திராவிடமுன்னேற்றக் கழகத்துக்கும் ஒற்றுமையிருக்கிறது. எனவே தி.மு.க. ஆட்சி ஏற்பட நாம் ஆவன செய்யவேண்டும். இதற்கு மக்களின் ஒத்துழைப்பே இன்றியமையாதது.

மக்களின் அறியாமையை முதற்பொருளாகக் கொண்டு மேலும் மேலும் ஆட்சியில் நீடிக்க இன்றைய ஆட்சியாளர் எண்ணுகின்றனர். மாணவர்களாகிய நாம் இன்றைய ஆட்சியின் குறைபாடுகளை, அறியாதவர்களுக்குப் புரியும் வகையில் எடுத்துச் சொல்ல வேண்டும். பட்டிதொட்டியெங்கும் கொள்கை விளக்கம் புரிதல் வேண்டும். அவ்வாறு கொள்கைபரப்பும் ஓர் அமைப்பாக இம் மாணவர் தேர்தல்படை திகழ்தல் வேண்டும்".

முடிபுகள்:

மாணவர் தேர்தல் படை நிறைவேற்றிய முடிபுகளை ஐ. செயராமன் விளக்கிக் கூறினர்.

அம் முடிபுகளாவன:

1 இந்தி ஆட்சிமொழி ஆவதை இம்மாணவர்தேர்தல் படை கடுமையாக எதிர்க்கிறது. உடனடியாக அத்தகுதியில் இருந்து இந்தி அகற்றப்பட வேண்டும்.

2 இந்திக்கு முதன்மை யளிக்கும் காங்கிரசுக் கட்சியை வருகின்ற 67-பொதுத் தேர்தலில் ஆட்சியிலிருந்து அகற்ற வேண்டும். இந்தியை எதிர்க்கும் இயக்கத்தினரை ஆட்சியில் அமர்த்த வேண்டும்.

3 பக்தவத்சலம் பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ள மறுத்த பின்னைமார் சங்க உயர்நிலைப்பள்ளி மாணவனைத் தாக்கிய காங்கிரசார் மீதும் காவற்படையினர் மீதும் அரசினர் வழக்குத் தொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4 மதுரைப் பல்கலைக் கழகப் பதவிகட்கு காங்கிரசின் கையாட்களுக்கு முதன்மை அளிக்காது, தகுதிக்கும் திறமைக்குமே முதன்மை இடம் அளிக்க வேண்டும்.

5 பாராளுமன்றத்தில் 'தமிழ்நாடு' எனத் தமிழ்நாட்டுக்குப் பெயரிடும் வகையிலான முடிவு ஒன்றை எதிர்க்கட்சியினர் கொணர்ந்த பொழுது அதற்கு இசைவுதர மறுத்த குடியரசுத் தலைவரை இக்குழுவன்மையாக எதிர்க்கிறது. இவ்வெதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் குடியரசுத் தலைவரும் தலைமை அமைச்சரும் மதுரை வரும்பொழுது அவர்கட்குக் கறுப்புக் கொடி காட்டப்படும்.

இறுதியில் இரா. முத்தையா நன்றி நவில கூட்டம் இனிதே முடிந்தது.

## அன்பர் அஞ்சல்

ஐயா!

மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவது கூடாதென்றும் மாணவர்கள் தம்முரிமைக்கெனப் போராட்டங்கள் நடாத்தினும் அது சில அரசியல் இயக்கங்களின் சூழ்ச்சி என்றும் வீணில் வெற்றுரை உரைபுகலும் ஆளுங் கட்சியினர் அண்மையில் மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி ஒன்றை மாநில அளவில் நடாத்துதற்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றனர்;

அந்தப் பேச்சுப் போட்டிக்கான தலைப்பு "மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனைகள் (Achievements of the third five year plan) என்பதாம்.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் பரிசு பெறும் நோக்கத்திலே "இவ்வரசின் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மணலைக் கயிறாகத் திரித்தார்கள், வானவில்லை விலைக்கு வாங்கினார்கள்" என்பது போலத்தான் பேசுவார்கள் என்பது வெள்ளிடை மலை.

இந்து மாணவர்களை அரசியலில் ஈடுபடுத்துவது அல்லவென எவரேனும் சொல்லவியலுமா? மேலும், ஆளுங் கட்சிக்கென அமைந்த இந்த விளம்பர வேலையில் மாணவர்களை ஈடுபடுத்துவது சூழ்ச்சி என்றும் அது இல்லை யல்லவே!

நல்லொழுக்கம் தீயொழுக்கம் எனக் கூறுதல் போல நல்ல சாதனை — கெட்ட (வகையில் செய்த) சாதனை எனும் தலைப்பில் பட்டிமன்றம் வைத்து மாணவர்களைப் பேச விடுமா இந்த அரசு! (இற்றை ஆளுங்கட்சியினர் தமது சாதனைகளே மகத்தானது என்று காப்பறை கொட்டும் பான்மையில் —மெய்யே மிகுதியெனில் எம்மனோர் விழைவது போலச் செய்வது தானே முறை! செய்யமாட்டார்?)

அவ்வாறு செய்யுமெனில் இவ்வரசின் பெருஞ் சாதனைகளான 'வேட்டெடுக்கும்கொண்டு உரிமைகேட்ட மாணவர்கள் தம் ஆருயிரைப் பறித்த சாதனை — சோழவள நாட்டையே சோற்றுக்குத் தாளமிட வைத்த சாதனை — மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் சேர்த்து வாங்கவிருக்கும் (வெளிநாட்டு உள்நாட்டுக்கடன்கள்) கடன் தொகையான 12859 கோடி உருபாய்களில் செய்த சாதனை—உயிரினும் மேலான தமிழுக்கு — அதன் வளர்ச்சிக்கு இந்த அரசியல் வித்தகர்கள் செய்த சாதனை!) என்ற இன்னோரன்ன பிறவற்றைப்பற்றிப் பேச மாணவர்கள் வருவர்! 'தனக்கொரு நீதி! பிறர்க்கொரு நீதி என்று என்றுத பான்மையினர்

யாம்' எனும் தோரணையினராக செயல் படுவதாகச் செப்பித் திரியும் அரசினர் இதற்கு ஒப்புவார்களா....... கோட்டை நாற்காலி இன்றுண்டு— நாளை கொண்டு போய் விடுவான் திராவிடக் காளை.
—பாரதி தாசனார்.

அன்பின்.
பெ. வீ. தமிழ்ப்பித்தன்,
பாரதி காரனர் இல்லம்,
விசயபுரம்.

## அடிசு அபாபா சென்ற கினி தூதுக் குழு

### ஆக்ராவில் நிறுத்தப்பட்டது.

ஆக்ரா அக் 31— ஆப்பிரிக்க நாடுகளின் ஒருமைப்பாடு மாநாட்டில் கலந்து கொள்ள அடிசு அபாபா சென்று கொண்டிருந்த கினி தூதுக்குழுவினர் ஆக்ராவில் நிறுத்தப்பட்டனர். இவர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர். கினிநாட்டு வெளியுறவு அமைச்சர் தலைமையில் இத்தூதுக்குழு அடிசு அபாபாவுக்குப் பயணமானது. ஆக்ராவில் இது நிறுத்தி வைக்கப்பட்டதற்கு அமெரிக்க அரசினர் தான் காரணமெனக் கினியா அரசினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அனைத்து நாட்டு நல விதிகட்குப் புறம்பாக இத் தூதுக்குழுவினரைக் காவலில் வைத்தது குறித்து கானாவுக்கு டான்சானியாவன்மையான எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. கானாவின் செயல் ஆப்பிரிக்க நாடுகளின் ஒருமைப் பாட்டுக்கே உலைவைக்கும் செயலாகும் எனவும் டான்சானியா கூறியுள்ளது.

## வரும் பொதுத்தேர்தலில்

# காங்கிரசுக் கட்சி வீழ்வது உறுதி

## பொதுவுடைமைக் கட்சித் தலைவர் கே. டி. கே. தங்கமணி கூறுகிறார்

(குறள்நெறிச் செய்தித்துறை)

அக்டோபர் 31— வருகின்ற 67 பொதுத் தேர்தலில் ஆளுங் கட்சி மாறப் போவது உறுதி" என இடதுசாரிப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் கே. டி. கே. தங்கமணி வரும் பொதுத் தேர்தலைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், நமது செய்தியாளரிடம் கூறினார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:

"காங்கிரசாட்சியின் குறைபாடுடைய குழப்பமான கொள்கைகளால் நாடெங்கும் "அனைத்துக் கட்சிக் கிளர்ச்சிகள்" நடைபெற்று வருகின்றனர். மாணவர்களின் கிளர்ச்சிகளும் மிகுந்துள்ளன. அரசினரின் அடக்கு முறைச் செயல்களே இவற்றிற்கு முதற் காரணம். இவற்றை எல்லாம் நோக்குங்கால், மக்களிடையே அரசு தோற்றுவிட்டது என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியுள்ளது.

இதுவரை நடந்த தேர்தல்களில் குறைந்த வாக்குகளைப் பெற்று காங்கிரசுக் கட்சி மிகுந்த இடங்களைப் பெற்றுள்ளது. இதற்குக் காரணம் எதிர்க் கட்சிகளிடையேயுள்ள பிளவுதான்.

எனவே வரும் தேர்தலில் தி. மு. கழகம் உள்ளபட எல்லா எதிர்க்கட்சிகளுடனும் வலதுசாரிப் பொதுவுடைமைக்கட்சி, உடன்பாடு காண எண்ணியுள்ளது.

கேரளத்தில் எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டது பிறமாநிலங்களுக்கும் வழி காட்டியாக அமைந்துள்ளது. வங்காளத்திலும் இவ்வொற்றுமை நிலவுகிறது.

நவம்பர் 6-இல் நாடெங்கும் நடக்க இருக்கும் கிளர்ச்சி எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்."

இவ்வாறு கே. டி. கே. தங்கமணி கூறினார்.

## ஆட்சிச் செல்வாக்கைத் தவருகப் பயன்படுத்துகிறது காங்கிரசு!

### தோழர். பி. இராமமூர்த்தி

மதுரை அக். 15 பெரியார்முத்துராமலிங்கத் தேவரின் 59-வது பிறந்த நாள் விழா நேற்று இரவு திலகர் திடல் அரங்கில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பல கட்சித் தலைவர்களும் பங்கு எடுத்துக் கொண்டு மறைந்த மாபெரும் தலைவர் தேவர் அவர்களின் சிறப்பை எடுத்துக் கூறினர். அக்கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுவுடைமைக் கட்சித் தலைவர்தோழர்இராமமூர்த்தி அவர்கள் தம்முடைய உரையில் கூறியதாவது:-

"எனக்கும் மறைந்ததலைவர் முத்து இராமலிங்கத் தேவர் அவர்களுக்கும் 1936 முதல் நெருங்கிய தொடர்பு உண்டு. பெரியார் முத்துராமலிங்கத் தேவர் வெறும் தேர்தல் வெற்றிக்காகப் போரிட்டார் அல்லர். உச்சவரம்புச் சட்டத்தை ஒழிப்பதற்கு அரும்பாடு பட்டவர். தமது வாழ்நாள் முழுவதும் அதற்கெனவே போராடியிருந்தார். இன்று உயிரோடு இருந்தால் காங்கிரசை எதிர்க்கும் எங்களுடன் சேர்ந்து முன்னணியில் நின்று அதனை ஒழிப்பதற்குப் பாடுபடுவார்.

காங்கிரசுக்காரர்கள் எப்பொழுதும் தாமே ஆள வேண்டும் என்று நினைக்கிறார்கள். இந்த ஆட்சியால் ஏற்பட்டுள்ள பெருங் கேடுகளையும், நேர்மையற்ற செயல்களையும் எல்லோரும் சேர்ந்து ஒழிக்கவேண்டும். இதற்கு மக்கள் எல்லோரும் ஆயத்தமாக வேண்டும். அறம் தழுவா ஆட்சியை அகற்றுவது என்று மக்கள் முடிவு கட்டிவிட்டார்கள். கொடுங்கோன்மை ஒரு நாளும் வெற்றிபெறாது.

இன்று ஆளும் கட்சி அஞ்சத் தொடங்கிவிட்டது. காவல் துறையைத் தவிர வேறு யாரையும் அவர்கள் நம்புவதில்லை. ஆட்சிச் செல்வாக்கை தவருகப் பயன்படுத்தும் காங்கிரசுகட்சியை அரியணையிலிருந்து அகற்றவேண்டும்.

மதுரை: 1—11—66
செவ்வாய்
வெளியீடு: 2—11—66
புதன்

# குறள் நெறி

தமிழ் வாழ்க

## வியத்துநாம் பற்றிக் கல்லூரியில் கருத்தரங்கு

மதுரை அக். 15
மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பேராசிரியர் பரந்தாமனர் தலைமையில் பட்டி மன்றம் ஒன்று நடந்தது. அதில் வியத்நாமில் வெளியார் தலையிடுவது உலக அமைதிக்குக் கேடு பயக்குமா பயக்காதா என்று சொற்போர் நிகழ்த்தினர். கேடு பயக்கும் என்று விரிவுரையாளர்கள் திரு. சுந்தரமூர்த்தி திரு. சாலமன் பாப்பையா திரு. சிவக்கண்ணன் ஆகியோரும்; கேடுப் பயக்காது என்று விரிவுரையாளர்கள் திரு.கே. பரமசிவம்,பொன்னகரம், சாப்டி. மோகன் முதலியோரும் எடுத்துரைத்தார்கள்.

வாக்கெடுப்பில் கேடு பயக்கும் என்ற கருத்தே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## சீன அச்சுறுத்தல் முறியடிக்கப்படும்

### அமெரிக்கா உறுதி

கோலாலம்பூர்—அக். 30
சீன அணுக்கருவிகளைப் பெருக்குவது அந்நாட்டிற்கே கேடு விளக்கக்கூடுமென அமெரிக்க அதிபர் சான்சன் அறிவித்தார். அதனல் விளையும் கேட்டைத் தடுத்து ஒத்தி வைத்துக்கொள்ள அமெரிக்கரால் இயலுமெனவுஞ் சொன்னர்.

அணுக்கருவிப்பெருக்கம்அச்சுறுத்தலென்றே முடிவான பேச்சென்றே செல்வதற்கில்லை என வெண்மனை வட்டாரத்தார் பேசுகின்றனர். கெடுதலைத் தடுக்கும் ஆற்றல் அமெரிக்கருக்கு உண்டென்பது உறுதி. ஏற்படக்கூடிய கேட்டினை எவ்வளவு ஒத்தி வைக்கக் கூடுமோ அந்த அளவிற்கான ஆக்க வேலையையே அதிபர் விரும்புவதாக இவ்வட்டாரத்தார் கூறுகின்றனர்

'அமைதியான சீன நட்பையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கலாம். ஓர்ந்தறியாத துணிச்சலுள்ளசீன விழிப்பையும் கண்காணிப்பையுமே தூண்டும்' என்பது அதிபர் சான்சனின் கூற்று.

"வளர்ச்சி பெருத நாடு அணுவாற்றற் பெருக்கத்தில் ஈடுபடுவது வருந்தத்தக்கதே. பசிப்பிணியால் வாடும் மக்களுக்கு வேண்டுவது உணவு. இதனைவிடுத்து குண்டுகளைப் பெருக்கும் நாடு அனைத்துலகக் கட்டுப்பாட்டிற்கு உட்படவேண்டும்.

"சீனத் தலைவர்கள் அணுவாற்றற் பெருக்கத்திற்கும் தடை ஏற்படக் கூடுமென நினைவில் நிறுத்த வேண்டும். நாட்டுத் தேவைக்கான ஆற்றல் பெருக்கத்திற்கு என்றும் நம் ஆதரவு உண்டு என எல்லா நாடுகளும் அறியும். அதை நாடாது வாழும் நாடுகள் அணுக்கருவி அச்சுறுத்தலை எதிர்க்க நேர்ந்தால் நம் ஆதரவு அந்நாடுகளுக்கு என்றும் உறுதியாக உண்டெனவும் அறிவித்துள்ளோம்."

எனவே இதர வளர்ச்சியுற்ற நாடுகளைப்போல்பெரும்பகுதிச் சீன நாட்டு இயற்கை வளத்தைப் பெருக்கி பொருளாதார முன்னேற்றத்தைக் காண்பதில் தனி கருத்தைச் செலுத்துமென நம்புகிறோம்" என அதிபர் சான்சன் முடித்தார்.

## நாட்டு மருத்துவம்

### தொழில் முறைச்சட்டம் விரைவில் வெளிவரும்

சேலம் அக். 30
தமது தொடக்கவுரையில் சென்னை எல். ஐ. எம். மாநாட்டில் நாட்டு மருத்துவத் தொழில் பற்றி விரைவில் சென்னை அரசு ஒரு சட்டம் கொண்டு வரும் என்று அமைச்சர் சோதிவெங்கடாசலம் அம்மையார் அறிவித்தார்கள். இதனல் இன்றுள்ள உரிமைக்குக் கேடு வராதென்று உறுதியளித்தார்கள்.

இம்முறையில் ஆய்வு தேவை என்பதை வற்புறுத்தி அதற்கான நிலையங்களை நிறுவ நடுவணரசின் ஒப்புதல் நாடி நிற்பதாகக் குறிப்பிட்டார்கள்.

பஞ்சாயத்து ஒன்றிப்பு மருத்துவ மனைகளில் வேலை பார்ப்பவர்களை ஊக்குவிக்கும் அளவுக்கு ஊதியம் மாற்றி திருப்பியமைத்தாகவும் அறிவிக்கப்பட்டது.

போதிய அளவு மாணவர்கள் சேராத காரணத்தால், நாட்டு மருத்துவப் பயிற்சி கைவிட நேரும். அதனல் மருத்துவர்கள் ஆங்காங்கு மக்களுக்கு இம்முறையில் பயிற்சியளிக்க வேண்டும் என்பதும் அவர் கருத்தாகும்.

## மிகிர்சென்னின் நீச்சல் தடைப்பட்டது

### பனமாவின் சூழ்நிலையே காரணம்

பனமா. அக் 31—
சரக்குக் கப்பல்களால் ஏற்படும் அலைகளின் கொந்தளிப்பால் மிகிர்செனுக்கு ஏதும் இடர்ப்பாடுஏற்படலாமென்று எண்ணியபடியால் பனமாக் கால்வாயை நீந்திக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள மிகிர்சென்னைக் கால்வாயை விட்டு வெளியேறுமாறு அலுவலர்கள் வேண்டிக்கொண்டனர்.

## தெ. மே. ஆப்பிரிக்க ஆட்சி மாருது.

தென்மேற்கு ஆப்பிரிக்காவை தென்னப்பிரிக்காவின் ஆட்சியினின்றும் மீட்க ஐ. நா. பேரவை ஏற்கும் முடிவு உடனடியாக செயல்படாதெனத் தெரிகிறது. ஏற்கெனவே கடந்த 21 ஆண்டுகளில் 75க்கு மேற்பட்ட ஐ. நா. முடிவுகளை தென் ஆப்பிரிக்கா மீறியிருக்கிறது. இப்போதைய தீர்மானம் நிறைவேறவுள்ள தறுவாயில் இம்முடிவு சட்டத்திற்கு மாறுனதெனத் தென் ஆட்பிரிக்கச் சார்பாளர் கூறிவிட்டார். எனவே அந்நாடு இதனை எதிர்ப்பது உறுதி.

வன்முறை நடவடிக்கை எடுப்பதற்கு ஐ. நா. வின் பாதுகாப்பு அவையின் இசைவு தேவை. அங்கு இது பற்றிய தீர்மானம் வரும் போது பிரிட்டனும் பிரான்சும் தமக்குள்ள சிறப்புரிமைகளைப் பயன்படுத்தித் தடை செய்யலாம். எனவே இன்றைய ஆட்சிப் பிடிப்பு நீடிக்கலாம்.

## வன்முறைச் செயல்களால் உணவு கேட்போரை அடக்கிவிட்டால் போதுமா?

### தஞ்சைமாவட்ட அனைத்துக் கட்சிக்குழுவின் கேள்விக்கணை.

தஞ்சை அக் 30
தஞ்சைமாவட்ட அனைத்துக் கட்சிக்குழு தஞ்சை உணவு விடுதித் தொழிலாளர்கள் சங்கக்கட்டிடத்தில் கூடியது.

மன்னை ப. நாராயணசாமி (தி. மு. க.), கே. ஆர். ஞானசம்பந்தம், என். வெங்கடாசலம் (பொதுவுடைமை), மு. உன்னிக்கிருட்டினன், டார்ப்பிரடோ அசீசு (முசுலிம் லீக்) அ. வி. இராமசாமி ஆகியோர் கூட்டத்திற் பங்கு கொண்டனர்.

அப்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. குறுவை அறுவடையிலேயே அரசினர் நேரடியாக இடைத்தரகரின்றிக் களத்து மேட்டிலேயே துரித கொள்முதல் செய்யவேண்டும்.

உணவுத் தானியக் கொள்முதலை அரசாங்கமே முழுமையாக ஏற்கவேண்டும்.

2. செப்டம்பர் 29 முதல் அக் 4 முடிய உண்ணு நோன்பிருந்த எதிர்க்கட்சித் தோழர்கட்கும், வேலைநிறுத்தம், கடையடைப்புச் செய்தோர்க்கும் இக்கூட்டம் தனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

3. காவற்படையினரின் வன்முறைச் செயல்கட்கு இக்கூட்டம் வன்மையான எதிர்ப்புத் தெரிவிக்கிறது. கொரடாச்சேரி நிகழ்ச்சி குறித்துப் புலனய்வு நடத்த வேண்டுமெனவும் அரசினரைக் இக்கூட்டம் வேண்டிக்கொள்கிறது. எதிர்க்கட்சிகளின் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளையும் அரசினர் திரும்பப்பெற வேண்டுமென இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

4. 6—11—66 –இல் அனைத கட்சிக் குழுவின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடத்த வேண்டுமென இக்கூட்டம் முடிவெடுக்கின்றது.

5. நடுவண் அமைச்சர்களும் மாநில அமைச்சர்களும் தஞ்சை மாவட்டத்துக்கு வரும் பொழுது இவ்வரசினரின் உணவுக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கறுப்புக்கொடி காட்டுவதெனவும் இக்கூட்டம் முடிவெடுத்துள்ளது.

உணவுகேட்ட மக்கள் மீது அடக்குமுறையை ஏவிவிட்ட ஆளுவோர் உணவளிக்க முடியவில்லை. ஆட்சி அடக்குமுறையைத்தான் ஏவிவிட்டதே தவிர உணவளிக்க இந்த ஆளுவோரால்இயலவில்லை இதுதான் இன்றைய ஆட்சியின் குறைபாடு. இதனை உணர்ந்து மக்கள் வரும் பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சியை மாற்ற ஆவன செய்ய வேண்டும்.

## மக்களவை

புதுதில்லி நவ, 1—
மக்களவையின் குளிர்காலக் கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது. இது இன்னும் ஐந்து வாரங்கட்கு நீடிக்கும். மாநிலங்களவையின் கூட்டத் தொடர் அடுத்த திங்கட்கிழமை தொடங்குகிறது.

மக்களவையின் இக்குளிர்காலக் கூட்டத் தொடரில் 11 சட்ட வரைவுகள் ஆய்வுக்கு வரும். இவற்றுள் முதன்மையானவற்றிற் சில பீடி, சுருட்டுத் தொழிலாளர்களின் பொதுநலனைப் பாதுகாத்தல் கோவா, டையூ, டாமன் ஆகிய நடுவண் அரசின் ஆட்சியில் உள்ள பகுதிகளில் கருத்தறிதல், விலைகளைக் கட்டுப்படுத்தல், ஏற்றுமதியை மிகுதிப்படுத்தல், தடுப்புக்காவல் சட்டத்தின் காலவரையறையை நீடித்தல், போன்றவையாம்.

## அறிவிப்பு

'குறள்நெறி' நாளிதழ், தாள் பங்கீட்டு உரிமை கிடைக்கப் பெருமையால் நிறுத்தப்பட்டிருந்தது. இப்பொழுது அவ்வுரிமை கிடைக்கப்பெற்றுள்ளது. ஆயினும் தாள் இன்னும் கிடைக்கப் பெறவில்லை. தாள் கிடைக்கும் வரையில் சிறிய அளவில்தான் வெளிவரும். தாள் கிடைத்தவுடன் பெரிய அளவில் வெளிவரும்.

— ஆசிரியர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் டாக்டர் சி. இலக்குவனர். பொறுப்பாசிரியர் இ. மறைமலை B. Sc. அச்சிட்டது: குறள்நெறி அச்சகம் திருப்பரங்குன்றம், மதுரை-5. தொலைபேசி8-65.